வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

உ
சிவமயம்

இந்து சாதனம்
HINDU SADHAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஅ] யாழ்ப்பாணம்:- நள ஞு புரட்டாதி மீ உஉ - உ வெள்ளிக்கிழமை (8 - 10 - 1976) [இல : உஎ

சைவ மக்களே! சமய நிலையைச் சற்றுச் சிந்தியுங்கள்

கதிர்காமத்தில் மடங்கள் எங்கே? கோணேஸ்வரத்திற் கோயிற்சூழலில் என்ன மாற்றம்?

வீண்கதை பேசி வாழ்நாளை வீணாக்குவதை விட்டு பழம் பெருமையைப் பாதுகாக்கப் பாடுபடுங்கள்

(ஆசிரிய வசனங்கள் நோக்குக)

பழைய பள்ளிக்கூடத்தின் பண்பான வளர்ச்சி

(முன் வளர்ச்சி - - 2)

புதிய சிரேஷ்ட வகுப்பின் பொழிப்பு

இவ்வருடத்திற் புதிய சிரேஷ்ட உயர்நிலைக் கல்வியின் முதல் வருட வகுப்பாகிய H. N. C. E கல்வி உலகின் முழுக்கவனத்தையும் ஈர்த்துள்ளதைக் கண்டு வியப்படைய வேண்டியதில்லை. G. C. E. (A/L) வகுப்பிற்குப் பதிலாக H N C. E; புகுத்தப்பட்டுள்ளது. எத்திட்டம் சிறந்தது என்ற வினாக்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. G. C. E. (A/L) திட்டத்தில் மாணவர்களுக்கு பரந்து பட்டதாயிலாமல் பொதுத்தொடர்பற்ற அறிவு விருத்தி அளிக்கும் நிலையினைச் சுட்டிக்காட்டி பௌதிக விஞ்ஞான மாணவன் மொழி பறிவை விருத்தி செய்யாது தனது மூதாதையரால் விட்டுச் செல்லப்பட்ட பாரம்பரிய மரபுவழிக் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை அறிய முடியாத வகையில் திட்டம் அமையப்பட்டிருந்த குறையை புதியதிட்டத்தில் முதல் மொழி, இரண்டாம் மொழி, மரபுவழிப்பண்பாடு என்ற பாடத்துறைகளைப் புகுத்தியதனால் நிவிருத்தியுள்ளனர்; வியாபாரம், உற்பத்தி ஆகியவை பெருகிவரும் நாடுகளில் முகாமையியல், புள்ளிவிபரவியல் பற்றிய அறிவு வளர்ச்சி பெற்றிருந்தாலன்றி அவற்றிலீடுபட்டுள்ள நிறுவனங்களை நன்கு நிர்வகித்துப் பலனடைய முடியாது; முகாமையியல் பிரத்தியேக கலையாக முன்னேற்றமடைந்த நாடுகளில் கற்பிக்கப்பட்டு வருவதனால் அங்குள்ள பல்துறை நிறுவனங்களின் முகாமையானது சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பொருளாதார அபிவிருத்தியை நாடிநிற்கும் நமது நாட்டிலும் முகாமைத்துறை அறிவையும் புள்ளிவிபரவியல் அடிப்படை அறிவையும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியைப் பெற்ற வெளியேறும் மாணவர்களுக்கு அளிப்பதன் மூலம் வருங்காலத்தில் தொழில்துறை, உற்பத்தித்துறைகளின் நிர்வாகம் சிறப்படைய வழிவகுக்கப்படும். புதிய திட்டத்தின் பொதுப் பாட அம்சமாகப் புகுத்தப்பட்டுள்ள பாடங்கள், சிரேஷ்ட இடைநிலைக்கல்வியைப் பரந்த அடிப்படையிலானதாக மாற்றியமைத்ததுமல்லாமல், நாட்டின் முன்னேற்றத்தைக் கூடியவளவு கருத்திற்கொண்டதாகவுமுள்ளதனால் G. C. E. (A/L) திட்டத்திலும் பார்க்கப் பயனுடையதென்றும் கூறி வரவேற்கின்றோம்.

H. N. C. E. பாடத்திட்டங்கள், பாடவிதானங்கள் பாட வழிகாட்டிகள் புதிதாகத் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் சேவைக் காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பாடப் புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் மாணவர்களும் வாசித்தும் பயன்பெற உசாத்துணை நூல்களின் பட்டியல்களும் வழங்கப்பட்டுள்ளன; உசாத்துணை நூல்களிற்பல வெளிநாட்டுப் பதிப்புகளாகவும் இருப்பதனால், அவற்றைப் பெறுவதில் பல கஷ்டங்களைப் பாடசாலைகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. புத்தக விற்பனையாளர்களிடமிருந்து இந்நூல்கள் பெறக்கூடியதாக இல்லாததனால் உசாத்துணை நூல்களைப் பயன்படுத்த வியலாதிருக்கின்றது; இந்நிலைமையைப் போக்குவதற்கு பாடநூல் வெளியீட்டு இலாகா உசாத்துணை நூல்களின் தேவைகளையறிந்து அவற்றைக் கூடிய விரைவிற் பெறத்தர ஒழுங்குகள் மேற்கொள்ளுமேயானால், வெளிநாட்டுச் செலவாணி பெறுதல் போன்ற கஷ்டங்களிலிருந்து பாடசாலைகள் விடுபடவும், ஆசிரியர்கள் அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட முன்னேற்றமான, தரமான நூல்களைக் கொண்டு, புதிய பாடத்திட்டத்திலான அறிவை விருத்தி செய்து கற்றல் கற்பித்தல் நிலையினைச் சிறப்பாக அமைத்து புதிய திட்டத்தினை நல்ல முறையிற் செயற்படுத்த உதவியாயிருக்கும். மாணவர்களின் உபயோகத்திற்கும் தமிழ், சிங்கள மொழிகளில் உசாத்துணை நூல்களைப் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பதனையும் மேற்கொள்வது அவசியமாகின்றது. இந்நடவடிக்கைகள் அதிவிரைவில் எடுக்கப்படுமேயாகில் இவ்வாண்டு H N C. E; மாணவர் நன்மையடைய வாய்ப்பாகும்.

வளர்ச்சி 6-ம் பக்கம்

தில்லையம்பதியில்

திருப்பணிகளுக்கு 45 இலட்சம் ரூபா

தமிழ்நாடு அரசின் அறநிலையத்தார் மதிப்பீடு

[எமது சிதம்பர நிருபர்]

தில்லையம்பதி ஸ்ரீ சபாநாயகர் (நடராஜமூர்த்தி) கோயிலுக்குள், கோபுரங்கள் -- திருமதில்கள் மண்டபங்கள் முதலான எல்லா இடங்களையும் சீர்திருத்தம் செய்யவும், திருப்பணிகள் நடத்துவதற்கும் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலைய கமிஷனர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் I. A S [அவர்கள் பெரும் முயற்சி எடுத்து ரூபாய் 45லக்ஷத்திற்கு 33 மதிப்பீடுகள் தயார் செய்து, தில்லை ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருப்பணிக் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

33 மதிப்பீடுகளும் நிறைவேற்றப்பட்டால் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் திருக்கோயில் புதிய தோற்றத்துடன் காட்சி அளித்து வரும்.

சைவபரிபாலன சபை வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஒத்திவைக்கப்பட்ட வருடாந்த பொதுக் கூட்டம் 10-10-1976 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்குச் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில நடைபெறும் என்று சபைச் செயலாளர் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் அறிவித்துள்ளார்.

29 உ இந்துமாமன்ற கொடி தினம்

அகில - இலங்கை இந்து மாமன்றத்தின் கொடி தினம் எதிர்வரும் 29-10-76 வெள்ளியன்று இலங்கையின் சகல பகுதிகளிலும் நடைபெற உள்ளது.

இக் கொடி தினத்தின் மூலம் இந்து சமயத்தின் பல துறை வளர்ச்சிக்காகவும் சுமார் 2 இலட்சம் ரூபா நிதியைச் சேர்க்கத் தொண்டர்கள் நிதி திரட்ட உள்ளனர். இப் பணிக்கு இந்து மக்களின் முழு ஆதரவும் கோரப்படுகிறது.

இக்கொடித்தின அமைப்பில் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக திரு. மயில், அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கொடித்தின விடயமாக விபரம் வேண்டுவோர் கொடித்தின அமைப்பாளர். 19, கல்லூரிவீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். --

கற்றவர் கணிக்கும் கலாநிதி

"இறை — ஒளி"

குலக்கலை கோயிலாக் கொண்டு குழைந்த
குண நலத்தால்,
இலக்கியத் தின்பம் எழவே, இளமைதொட்
டெண்ணறிந்த,வ்
இலக்கணத் தெல்லைகண் டெண்ணற்ற
மாணார்க் கெழுத்துரை, பல்
கலைக்குரு பண்டிதர் கண்மணி, காண்மெய்க்
கலாநிதியே.

சுபீட்சம் உண்டாகுக

திருதருமபுரத்தில் 26-ஆவது சதசண்டி விழா

திரு தருமபுரம் ஆதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ. ல. ஸ்ரீ- சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், "தனி மனிதர்களுக்கும் — சமுதாயத்திற்கும் — நாட்டிற்கும் — உலகிற்கும் செல்வமும் — வீரமும் பெருகி சுபீட்சம் உண்டாகும் பொருட்டு ஆதீனத்திலுள்ள ஸ்ரீ அஷ்டாதச புஜா மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில புரட்டாசித் திங்கள் 8-ஆம் நாள் முதல் நவராத்திரி விழா வரையில் 26 ஆவது சத சண்டி வேள்வி விழாவை சிறப்பாக நடாத்தி வைத்தார்கள்.

"ஆமகரத்னாகரம்" பிரமஸ்ரீ சுவாமி நாதசிவாசாரிய சுவாமிகள் வேள்வியை முறையாக நடத்தி வைத்தார்.

ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் ஒன்பது குத்துவிளக்குகளில் நவ துர்க்கா ஆராதனை நடைபெற்றது,

ஆனந்த தாண்டவபுரம் பிரமஸ்ரீ பி. இராமதாச அய்யர் அவர்கள லலிதாஸஹஸ்ர — நாமம் — லலிதா ஸஹஸ்ர நாதபாஷ்யம் — ஆனந்த ஸாகரஸ் தவம் — சவுந் தர்யல ஹரி — ரோகி அஷ்டகம் — முகபஞ்சசதீ — லகுஸ்துதி — ஸப்தசதீ என்ற தலைப்பில் 8 நாள் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள.

ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காதேவுக்கு பகலிலும், இரவிலும் வேதபாராயணம், திருமுறைகள் அபிராமி அந்தாதி பாராயணங்களுடன் விசேஷ அபிஷேக. அலங்கார ஆராதனைகளும் லக்ஷிார்ச்சனையும் நடைபெற்றன.

ஸ்ரீ. ல. ஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் இரு வேளையும் சந்நிதிக்கு எழுந்தருளி வழிபாடுகள் செயது கொண்டு அனைவர்களுக்கும் அருள்பிரசாதம் வழங்கினர்கள்.

புரட்டாசித்திங்கள் 16 ஆம்நாள் காலை ஸ்ரீ. ல. ஸ்ரீ. குருமகா சந்நிதானம அவர்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு சத சண்டி வேளவி கலச அபிஷேகம் நடத்திவைத்து ஆராதனைகள் செய்து வழிபாடுகள் செய்து கொண்டார்கள்.

ஆதீனக் கல்வி நிலைகளின் கலைமகள விழாவும் நடைபெற்றது. (ந. நி)

இன்று இசை விருந்து

சங்கீத வித்துவான் திருமதி குணபூஷணம் நாகராசாவின் இன்னிசை விருந்து இன்றுமாலை யாழ். இறிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது. இவர் தமிழ் நாடு அரசு இசைக்கல்லூரியில சங்கீத வித்துவான் பட்டம் பெற்றவராகும். யாழ். அன்னாமலை இசைத்தமிழ் மன்றத்தின் முதல் மாணவியான இவர் நல்லூர் திரு. நாகலிங்கம் தம்பதிகளின் புத்திரியாவர்.

கைதடி பாடசாலை சாதனை

சர்வதேச செவிப்புலன் இழந்த குழந்தைகள் தினக் கொண்டாட்டம் அன்மையில்கொழும்பில் நடைபெற்றது. அகில இலங்கை செவிப்புலனிழந்தோர் பாடசாலைகளுக்கான செதிரப் போட்டியில் கைதடி செவிடர் குருடர் பாடசாலை 9 இடங்களுள் 6ல் பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவராவினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

நள ஞு புரட்டாதி மீ உ உ உ வெள்ளி

குறைநீங்குவதுஎக்காலம்?

திருக்கோணேசுவரம் வழிபாட்டுக்குச் சென்ற ஒரு சைவப் பெரியார் அத் தலத்தின் இன்றைய சூழ்நிலையைப்பற்றி மனக்கவலையுடன் எடுத்துரைத்து, இப் பெரும் பாடல்பெற்ற தலம் அந்நிய சுற்றுடலிலிருக்கின்ற எண்ணம் எழுவதாகக் கூறினர்.

காலம் மாறுகின்றதா? காசினி வேறுபாடாகின்றதா! அல்லது மனிதன் தலைகீழாகப்போகின்றானா? என்று வியப்படைய வேண்டிய விபரீதநிலையுண்டாகியிருக்கின்றதை நினைக்கும்பொழுது சைவ மக்கள் சிவத் தலங்களைப் பேணிப் போற்றி வைக்கத் தவறிவிட்டார்கள் என்றே குறை சொல்ல வேண்டியிருக்கின்றது!

இலங்கை வேந்தன் வணங்கிய தலத்தின் மகிமை வரலாறுக்கப்பாற்பட்டது. தேவாரப் பெருமகிமை பொருந்தியது. எண்ணற்ற சைவ மக்களின் தலை சிறந்த கோயில்- இத் தகைய ஆலயமா இன்று அந்நிய மயத்தில் இயங்க வேண்டியிருக்கின்றது.

திருக்கோயிலைச் சூழவே பெரு நகரங்கள் பெருகுவது வழக்கம். அந் நகர மக்களே அக் கோயிலுக்குரியவர்களாவதும் இயல்பு.

அப்படி இருந்தும் என்னே இக் கோவிலின் இன்றைய சூழல்!

கதிர்காமம் என்ற பூர்வீக புண்ணிய தலத்துக்கும் இக் கதி முன்னரே நிகழ்ந்துவிட்டது. ஆங்கிருந்த சைவ மடாலயங்கள் தரும சாலைகள் யாவும் மாயமாய் மறைந்துபோயின. இவை யாவற்றையும் கண்டும் கவலையுற்றும் கண் கலங்கியும் நிற்கும் சைவ மக்கள் அவ்வளவிலேயே நிற்கின்றார்களன்றி ஆக்க வழி தேடுகின்றாரில்லையே!

இறைவனே இக் குறையை நீக்க வேண்டும்.

திருத்தொண்டர் தம் சிந்தைச் செம்மை

[இளைப்பாறிய ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை]

(முன் வளர்ச்சி — 18)

1. இயற்பகை நாயனார் தமது மனைவியாரைச் சிவபெருமானாகிய அடியாருக்குக் கொடுக்க அதனை மனமுவந்து ஏற்றார் அவரது மனைவியார்.
"இன்று நீரெனக்கருள் செய்ததிதுவே என்னுயிர்க் கொரு நாதநீர் உரைத்ததொன்றை நான செய்யும் அத்தனையல்லால் உரிமைவேறுளதோ எனக்கு" என்று கூறுகிறார். இயற்பகை நாயனாரின் மனைவியார்.

2. "விளக்கிட்டார் பேறு செல்லின் மெய்நெறி ஞானமாகும்" என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்குப்படி திருவொற்றியூர்த் திருக் கோயிலில் விளக்கிடும் தொண்டை நியமமாகப் பயபக்தியோடும் செய்தார் கலிய நாயனார் செல்வம் எல்லாம் மாண்டுபோக மனைவியை விற்றுப் பொருள் பெற்று விளக்கெரிக்க மனைவியாரை கொண்டு சென்றார் — ஆனால் மனைவியாரை விலைகொடுத்து வாங்குபவர் இல்லை - தம்மை விற்பதற்கு மறுமலைருந்தார் கலிய நாயனாரின் மனைவியார்.

3. திருவாரூரில் கோயில் கொண்டருளியிருக்கும் சிவபெருமான் திருமேனியில் சிலந்தி ஊர்வதனைத் திருநீலநக்க நாயனாரின் மனைவியார் கண்டவுடனே வாயால் ஊதிப் போகும்படி செய்தார். உமிழ் நீரைத் திருமேனியில் விட்ட குற்றத்திற்காக நாயனார் மனைவியாரைக் கடிந்தார். அவரை விடவும் நினைத்தார் ஆனால் மனைவியார் செய்தது சரி என்பதனை எம்பெருமான் உணர்த்தியருளினார்.

4. கலிக்கம்பர் என்னும் நாயனார் அடியாருக்கு அமுதூட்டும் பண்புடையார் அவர் வீட்டின் வேலைக்காரன் கோபித்துக் கொண்டு போய் விட்டான் — ஆனால் அவன் சில வேடம் தாங்கி கலிக்கம்ப நாயனார் இல்லத்திற்கு வேறு அடியார்களுடன் சென்றான் வேலைக்காரனாக இருந்தவன் அடியாரின் வேடந்தாங்கி வந்தான் என்று கரகநீர் வார்க்க அவரது மனைவியார் மறுத்தார் - வேறு ஒன்றும் யோசியாமல் கரகநீர் வார்க்க மறுத்த மனைவியார் கையை வாளினால் வெட்டினார். கலிக்கம்பர் அதற்கு மனைவியார் கோபிக்கவில்லை.

5. கழற்சிங்கநாயனார் என்னும் ஓர் அரசர் உளர் அவர் மனைவி திருவாரூர்ப் பூக்கட்டு மண்டபத்தில் எம்பெருமானுக்குச் சார்த்துவதற்காக வைக்கப்பட்ட பூ ஒன்றைக் கையால் எடுத்து மோந்தார் - செருத்துணை நாயனார் அதனைக் கண்டார் அரசி என்பதையும் யோசியாமல் அவர் பூவை மணந்த மூக்கை அறுத்தார் - பின் கழற்சிங்கநாயனார் என்னும் அரசர் மூக்கைத் தடிந்தது போதாதென்றும் பூவை எடுத்த கையையும் வெட்டினார் அரசி அரசனைக் கோபிக்கவில்லை ஆகையால் இவற்றிலிருந்து அறியக்கிடப்பது என்னவென்றால் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இம்மையில வாழ்ந்ததும் அல்லாமல் பேரின்பமாகிய திருநெறிக்கும் ஆளானார்கள் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு விவாகம் செய்பவர் ஒழுகவேண்டும்.

சைவசமயத்தில் விவாகத்திற்கு ஓர் புனிதத்துவத்தையும் தெய்வத் தன்மையும் கொடுத்திருக்கிறார்கள். மணமகனும் மணமகளும் சிவமும் சக்தியும் ஆக எல்லோரும் பாவிக்கிறார்கள் விவாகக் கிரியை நடைபெறும்போது இருவரையும் இணைத்து வைக்கும் குருக்கள் கீழே ஒரு ஆசனத்திலிருக்க [illegible] பிள்ளை பெண்பிள்ளைகளை

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

திருப்பணிக்கு - திருப்பதி தலம்
15 இலட்சம் ரூபா

பத்தர்: "அமெரிக்காவில் — நியூயோர்க், பிற்ஸ்பேர்க் முதலாம் இடங்களில் தென்னிந்தியபாணியில், 'கணேசர்' ஆலயமும், வேங்கடேசுவரர் ஆலயமும் கட்டப்படுகின்றனவாம்; இத் திருப்பணிகளுக்கு ஆதரவு பெருகிவருகிறது; விக்கிரகங்கள் அமைப்புக்கும், கருங்கற்கள் பொழிவுக்கும் திருப்பதித் தேவத்தானம் பதினைந்து இலட்சம் ரூபா நன்கொடையாக உதவியிருக்கிறது.

கித்தர்: "அப்படியா? பூரிப்பைத் தரும் இச் செய்தியைக் கேட்க பேரானந்தமாயிருக்குது; நாம் எதை எதையெல்லாம் மறந்து விட்டோம்? எதைச் செய்கின்றோம்? இச் செய்தி எம்மவர் சிந்தனையைத் தூண்டிவிடுமா?

"நாயன்மார்-நாதன்"

திருக்கடவூர் அபிராமியம்மைப் பதிகம்.

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரியபுரு வச்சி லைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யுஞ்சிறிய
கொவ்வையின் கனிய ரமும்
குமிழனைய நாசியும் குந்தங்கர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திறுமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே:
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! (2)

எலாமணைமின் சீர் பாடவே.

[பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை]

உள்ளூற் றுருகி யுடல்சிலிர்க்க நின்றுநிக்
கள்ளூறுதீஞ் சொல்லாய்க் கதிக்குமே — தெள்ளுதமிழ்
காத்தளிக்கும் தீரன் கணபதிப்பிள் ளைக்கிலைக்ய
வாய்த்தசுவை யின்ப வளம். (1)

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்லெனவே — நாட்டுமிது
கேட்டதுண்டு; கண்டதிலை கேழ்பண் டிதமணிசொல்
கேட்டதன்முன் நாட்டவர் தாம். (2)

குசைமதியார் கூற்றினுளுங் கூர்ந்துநுழைந் தாங்கண்
இசைவின்மை காணினெதிர் காட்டி — அசைவறவே
உண்மைநிலை நாட்டியிடு மோரபர நக்கீரன்
வண்மைமிகு பண்டிதனெம் மான். (3)

வண்டமிழ்தேர் நாவலர்தா மோதரர்நா வேற்பிள்ளை
கொண்டபணி மாண்பருமை கோதாட்டும்—பண்டிதனார்
வாக்கினிலும் மற்றவர்தம் மாற்றார்க்கு நேர்கொடுக்கும்
தாக்கினிலும் வாழுந் தமிழ். (4)

போற்றற் குரியார் புகழிசைக்கும் பாணியிலே
ஏற்கா ரிழிவும் இழைபோட — மாற்றில்லா
மாதுரியந் தேங்க வசனிக்கும் பண்டிதனார்
சாதுரியந் தானே தனி. (5)

நாநயங்கொண் டோங்கு நயமொழியான் நாவல்லோர்
பாநயங்கண் டோங்கு பரிவுளத்தான் — மேவுந்
"கலாநிதி"யாம் மேன்மை கனிதமிழ்க்கோர் மேன்மை
எலாமணைமின் சீர்பாட வே. (6)

நாவலர் நடைநெறி காவலன் பண்டிதன்
நற்றமிழ் வேலி நலஞ்சாரும்
பூவலர் சாஸ்திர உண்மை வனப்பொளிர்
புத்தெழி லோங்குயர் பொற்கோயில்
xகாவலர் மலரளி கழுமுநெல் வேலியன்
கலாநிதி கணபதிப் பிள்ளைபுகழ்
பாவலர் பாடுமின்! பண்டிதர் போற்றுமின்!
பண்புறு மாதவர் வாழ்த்துமினோ! (7)

x பண்டிதமணியின் புலமை வாசனை முகர்தற்கு வந்து மொய்க்கும் இரசிக மதுகரங்களின் குழுவை ஞாபகப்படுத்தும் இத் தொடர்.

கழுமுதல் = நெருங்குதல், நிறைதல், மொய்த்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய பள்ளிக்கூடத்தின் . . . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

சென்ற ஆண்டு பரிசுத்தின அறிக்கையில் வகுப்பறைகளின் பற்றாமை பற்றியும், தொழில் முன்னிலைப்பாடங்களை திருப்தியான முறையில் கற்பிப்பதற்கு தொழிற்கூட வசதிகளை விரிவடையச் செய்தலின் அவசியத்தைப் பற்றியும், விஞ்ஞான கூடங்களை விஸ்தரித்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தேன். இவை சம்பந்தமாக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்:

இப்பணியினை நிறைவேற்ற நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினரும், யாழ் மாவட்ட அரசியலதிகாரியும் எமது பழைய மாணவர் சங்கத் தலைவருமாகிய திரு. C. அருளம்பலம் அவர்கள் பெருமளவில் உதவி புரிந்துள்ளார்கள். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எமக்கு ஒருலட்சத்து முப்பத்தாறு யிரம் ரூபாவைப் பெற்றுத்தந்துள்ளார்கள். அத்துடன் பழைய மாணவர் சங்கமும் கோயில் கட்டிட நிதியிலிருந்து ரூபா பதினையாயிரம் கடனாகத் தந்துதவியுள்ளது. இவற்றைக் கொண்டு 180 அடி நீளமும் 20 அடி அகலமுங் கொண்ட மாடிக்கட்டிடமொன்றை நாம் கட்டி வருகின்றோம். கீழ்மாடி வேலைகள் பூர்த்தியாகியுள்ளன; மேல்மாடி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; இக்கட்டிடம் பூர்த்தியானதும் எட்டு மேலதிக வகுப்பறைகளும் நான்கு சிறிய அறைகளும் உபயோகத்திற்குக்கிடைக்கும். இக்கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குப் பேருதவி புரிந்த தேசியப் பேரவை உறுப்பினர் C. அருளம்பலம் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மேலுமவர்களின் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுமுடையோம்.

தொழிற்கூட வசதிகளை விரிவாக்கும் முயற்சியிலும் நாம் சிறிதளவு முன்னேற்றத்தை இவ்வாண்டு பெற்றுள்ளோம் இவ்வளவு காலமும் எமது மாணவர்கள் மோட்டார் எந்திரவியல் பாடத்தை அருகாமையிலிருந்த இளைஞர் பொருளாதார முன்னேற்ற மன்றத்துக்குச் (Youth Council) சென்று கற்றுவந்தனர். மேற்படி மன்றம் (Youth Council) சென்ற ஆண்டின் பிற்பகுதியில் மூடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவ்விளையில் மோட்டார் எந்திரவியல் கற்பிப்பதற்குரிய பல ஆயிரம் ரூபாய்கள் பெறுமதியான உபகரணங்கள் அத்தனையையும் இளைஞர் பொருளாதார முன்னேற்ற மன்ற (Youth Council) முகாமைச் சபையினர் எமக்குக்கையளித்துள்ளனர், இவற்றை நாம் பெறுவதற்கு எமதுமுதுபெரும் பழைய மாணவரும் இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளருமான திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் பேருதவி புரிந்துள்ளார்; அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் அவர்களும், கல்வி அதிகாரி திரு. இ.வி. இராமநாதன் அவர்களின சிபார்சினைக் கொண்டு இவ்வுபகரணங்களை நாம் பெறுவதற்கு அரசாங்க நிதியை உதவியுள்ளார். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்: இவ்வுபகரணங்களைக் கொண்டு மோட்டார் எந்திரவியல் பாடத்தைக் கற்பிப்பதற்கு வேண்டிய தொழிற்கூடத்தை பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்தும், வசதிகட்டண நிதியிலிருந்தும் பணத்தைப் பெற்று ஆக்கியுள்ளோம்; இன்று யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய தொழிற்கூடமாக எமது தொழிற்கூடம் அமைந்துள்ளது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் 6-ம் வகுப்பில் உலோக வேலையையும், விவசாயத்தையும் மேலதிக தொழில் முன்னிலைப் பாடங்களாகப் புகுத்தியுள்ளோம்; இப்பொழுது எமது கல்லூரியில் எல்லாமாக ஆறு தொழில் முன்னிலைப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உலோக வேலையைக் கற்பிப்பதற்குத் தொழிற்கூடமொன்றைத் தற்காலிகமாக அமைத்துள்ளோம், விவசாய உபகரண அறையொன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. செய்முறைத் தேவையைக் கருதி பாடசாலை வளவில் ¼ ஏக்கர் நிலப்பரப்பையும் ஒதுக்கி வேலியிட்டு செய்முறையை ஊக்கப்படுத்தியுள்ளோம். விவசாயத்திற்கு வேண்டிய பல உபகரணங்களையும் விதியாபகுதி எமக்குத் தந்துதவியுள்ளது;

புதிய H.N.C E. வகுப்புகளை ஆரம்பித்த காலத்திலிருந்து விஞ்ஞான ஆய்வுகூட வசதியையும் விஸ்தரிக்க வேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டோம். பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து பெறப்பட்ட பணத்தைக் கொண்டும் பழைய கட்டடத்திலிருந்து பெறற மரம், நிலை, கதவு, ஜன்னல் அஸ்பஸ்ரோஸ் தகடு முதலியவற்றையும் கொண்டு 60 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஆய்வு கூடமொன்றையும் இப்பொழுது கட்டி வருகின்றோம். இன்னும் ஒரு மாத காலத்தில் இவ்வேலையும் பூர்த்தியாகவுள்ளது.

பாடசாலை வளவைச் சுற்றியுள்ள வேலிகளை வருடாவருடம் அடைப்பிப்பதனால் பெருமளவு பணம் வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவாகி வந்துள்ளது. இதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 100 அடி நீளமுள்ள சுவரொன்றையும் பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து கட்டி முடித்துள்ளோம்.

பரீட்சைப்பெறு பேறுகள்:

1. தேசிய பொதுக் கல்வித்தராதரப் பத்திரப் பரீட்சை 1975
   (1) தேசிய உயர்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை வகுப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதி பெற்றோர் 105
   (2) ஐந்து பாடங்களிலும் அவற்றிற்குக் கூடுதலாகவும் விசேடசித்து பெற்றோர் 16
   செல்வன் S. இரஞ்சன் பத்துப்பாடங்களிலும் விசேடசித்தி பெற்றுள்ளார்.

2. க. பொ. த. ப (சாதாரணதர) மார்கழி 1975 இல் சித்தியடைந்தோர்

	விஞ்ஞானம்.	கலை.	மொத்தம்
(1) ஆறு பாடங்களிலும் கூடியபாடங்களிலும்	153	12	165
(2) ஐந்து பாடங்களில	37	7	44
(3) க. பொ. த. ப. (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்றோர்			148

அபயகரன் ஜனகன் தூயகணிதம், பிரயோகணிதம், பௌதிகம், இரசாயனம், தமிழ்ப்பாஷை, இந்து சமயம். ஆகியபாடங்களில் விசேடசித்தியும் உயர்கணிதம், ஆங்கிலம் ஆகிய இருபாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றுள்ளார்.

3. க. பொ. த. (உயர்தரம்) 1976 சித்திரை

	விஞ்ஞானம்.	உயிரியல்	கலை	மொத்தம்
4 பாடங்களிலும் சித்தி யடைந்தோர்	58	16	11	80
3 பாடங்களில் சித்தி யடைந்தோர்	60	7	9	46

M. அருள்நேசன், S. உமாகாந்த சர்மா தூயகணிதம் பிரயோகணிதம் பௌதிகம் ஆகியபாடங்களில் அதிவிசேட சித்தியும் (A) இரசாயனத்தில் விசேட சித்தியும் (B) பெற்றுள்ளார்கள்.

S. குமாரதேவன் தூயகணிதம், பிரயோகணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் அதிவிசேட சித்தியும் இரசாயனத்தில் திறமைச் சித்தியும் பெற்றுள்ளார். ——

(யாழ். இ. க. அதிபர் அறிக்கையில் ஒரு பகுதி - 1976)

ஆலய வழிபாடு

சைவப்புலவர் வ. சுப்பிரமணியம்

(முன் வளர்ச்சி — 3)

"மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமதயானை, பரத்தை மறைத்தே பார்பஞ்ச பூதம், பரததில் மறைந்த பார்பஞ்ச பூதம்"

என்னும் திருவாக்கின்படி ஒருவன் ஓர் யானைவாகனத்தைப்பார்த்து, அதன் அவயவாதிகளை உற்றுநோக்கி, இதன் துதிக்கை பல மாயிருக்கிறது காது அகலமாய் அழகாயிருக்கிறது, என்று கவனிப்பானாயின், அது அவனுக்கு உயிருள்ள யானை போலவே தோன்றும். அதைவிட்டு, இந்த வாகனம் எந்த மரத்தால் செய்யப்பட்டது. முதிரையா? தேக்கா? எனக் கவனிப்பானாயின், அவன் யானையை மறந்தவனாகிறான் அது அவனுக்கு மரமாகவே தோன்றும் அது போலவே விக்கிரகத்தைக்கண்டு ஈசுர சொரூபமாகப் பாவிப்போமாயின், அதுஈசுரவடிவமாக (சிவ)வே தோன்றும். அதைத் தவிர்த்து. இந்த விக்கிரகம் செப்பால் செய்யப்பட்டதா? அல்லது பித்தளையினால்செய்யப்பட்டதா என நினைப்போமாகில், அது செம்பாகவும் பித்தளையாகவுந்தான் தோன்றும் ஆதலால், ஆலயத்துக்குச் சென்று ஈசுவரனை உள்ளன்புடன் வணங்குவதைவிட, மிகச்சிறந்தது ஒன்றுமில்லை யென ஏற்படுகிறது.

[ஆலயந்தொழுதல் சாலவுநன்று.]

திருநாளைப்போவார்நாள்

திருநாளைப் போவார் திருநாள் வழிபாடும் விசேடபூசையும், யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரியமான் கோவிலில் 11-10-76 செவ்வாயன்று யா. நா சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நடாத்தப்பெறும்.

திருத் தொண்டர் ...

[2ம் பக்க வளர்ச்சி]

உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருப்பதனால் விவாகத்தின் மகத்துவத்தை நாம் ஒருவாறு அறியலாம் - தெய்வலோக யாத்திரைக்கு மணமக்கள் சங்கற்பம் செய்து கொண்டார்கள் என்பது அர்த்தம். ஆகையால் புதியதொரு சமுதாயம் எம்நாட்டில் உதயமாக்க வேண்டும் சேக்கிழார் அடிகள் அடியார்கள் வாயிலாகக் காட்டிய ஒரு தெய்வத்தன்மை மணவாழ்வில் மிளிர வேண்டும் இதுகாறும் நாம் "சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்" என்ற தலைப்பின் ஆராயப்பட்ட உண்மைகள் பின்வருவன.

தமிழகம் தனிச்சிறப்பு வாய்ந்த தேசமாகும் கோயில்கள், தீர்த்தங்கள் மலைகள், நெல்வயலகள் உள.

வேதங்களினதும் ஆகமங்களினதும் செழிப்பை தென்னாட்டிற் காணலாம்.

பண்பட்ட உள்ளம் படைத்த சான்றோர் தமிழ நாட்டில் வாழ்ந்தார்கள்.

(வளரும்)

திருமந்திரம்

மடல் விரிகொன்றையன் மாயன்! படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர் படர்ந்து எழா நரகிற்கிடப்பர்
குடர்பட வெந்தமா கூப்பிடு மாறே.

குறிப்பு: உடம்பைப்படைத்த பெருமானை உடம்பினுள் கண்டு வணங்காமையால் துன்பம் உண்டாயிற்று.

மாயனும் மாலனுகி 4:4:6
சித்தத்துள் தித்திக்கும் தேனே

காரைநகர். தி. மணவாளபிள்ளை

ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை விண்ணப்ப நீதிமன்றத்தில்
வழ இல. 435

1. கந்தன் மகள் சிவப்பி — கரணவாய் வடக்கு வாதி
எதிராக
1. வல்லி திருநாவுக்கரசு கரணவாய் வடக்கு 2. பெண் மகேஸ்வரி பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்தகொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1976ம்ஆண்டு கார்த்திகை (நவெம்பர்) மாதம் 15-ந் திகதி (15-11-76) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்தஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமாராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் கொற்றுவத்தைக் குறிச்சி கிளானை நில: 7¼ ஷெ நில: 7 கூடிய நிலப்பரப்கி 14¼ இது ஆட்சிப்படி நில 17 குளி 22 17/32 இது பிரிவிடல்ப்படியும் ஆட்சிப்படியும் கிழக்கரைவாசிக்கு நில 8 குளி 15, 17/64 இதில் கிழக்கரைவாசியில் தெற்கும்பக்கமாக ¼ பங்குக்கு நில1 குளி1, 465/512 இது 2 ம் துண்டு என்று அடையாளமிடப்பட்டது. எல்லை கிழக்கும். தெற்கும் ஒழுங்கை வடக்கு ஆழவான் வல்லிக்குடைய 3-ம் நம்பர் துண்டு, மேற்கு கணபதி கிருஷ்ணபிள்ளை பெண் இராசம்மாவுக்குடைய 1-ம் நம்பர் துண்டு இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள், வடலிகள் அடங்கலும். (மதிப்பிட்டவிலை ரூபா 2850/-)

தீர்வைத்தொகை	ரூபா	1472-00
வட்டி ரூபா 980 00க்கு 10 வீதப்படி 2,12.74 தொடக்கம் 4.3,75 வரை	ரூபா	24-48
வட்டி ரூபா 1472-00கு 5வீதப்படி 4.3.75 தொடக்கம் 15.11.76 விற்பனவுவரை	ரூபா	122-60
வழக்குச்செலவுகள் ரூபா		300-00
மொத்த ரூபா		1919-08

சிவலிங்க நிலையம் க. நல்ललிங்கம்
வி. எம். ரோட் நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்
பருத்தித்துறை 5-10-76 70 8-10-76 விலைமதிப்பாளரும்

கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக் கோட்டை கிழக்கு வட்டுக்கோட்டை
(1) சிதம்பரப்பிள்ளை இராசையாவும் பெண்
(2) லீலாவதியும் வாதிகள்
இல ஈடு 637 எதிராக
(1) கந்தையா பூபாலசிங்கம், பெண்
(2) சிவபாக்கியம் பிரதிவாதிகள்

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டின் ஈடு 637ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 976 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 ம் திகதி (25-10-76) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபாய் 1507-1 இன்னும் ரூபாய் 1000-க்கு 8-5-75 தொடக்கம் 19-11-75 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகையும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 394-10 செலவில் ரூபா 150- கொடுபட்டது

குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "யாத்தப்புலோவும் கொட்டைப்புளியும்" பர - நில - இல்லா 5 குளி 16 இதில் மேற்குப்பக்கமாக 1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 திகதி அழகுகாரன் எஸ். முத்துக்குமாரசாமியால் அழந்து தயாரிக்கப்பட்ட 3408 ம் இலக்கப்பத்திரத்தின் படி பர-நில-இலா ஒன்றும் குளி பன்னிரண்டும் வான் பயிர் செய் பயிர்களும் எல்லை கிழக்கு தம்பு கந்தையாவுக்குரிய இதன் மிகுதி ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு தம்பு தருமலிங்கத்துக்கும் பங்காளருக்கு முரியவாதனம் தெற்கு தம்பு கந்தையாவுக்குரிய மிகுதியாதனமும் சிதம்பரப்பிள்ளை கந்தகவாமிக்குரிய வாதனமும் இந்த எல்லைப்படி அடங்கலும் இலக்கம் E 431 28

செ. விசாகரெத்தினம்
133 பருத்துறை ரோட் விற்பனவுஆணையாளர்
நல்லூர், யாழ்ப்பாணம், 18 - 9 . 76 71 8 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

எற்றுப் பசக்கள் இருபத்து நாலுள,
ஊற்றுப் பசக்கள் ஒருகுடம் பால்போதும்,
ஆற்றுப் பசக்கள் கறந்துண்ணுங் காலத்து
மாற்றுப் பசக்கள் வாயறி யோமே,

There are 24 cow-calves. The milk-cows yield (abundant) milk, a potful of which gives satisfaction. When the yield of the airy cows is enjoyed, we do not recognise the other cows.

Hindu Organ

Friday, October 8, 1976

Look Within Long Overdue

WHILE congratulating our Premier on her achievement in the U. N. as the chosen representative of number of non-aligned nations, we wish to remind her of something that is long overdue from her. Sri Lanka, in voicing the feelings of the countries that do not wish to be rocked by any Power Bloc, has enunciated a code of conduct for self-respecting nations that do not profess ideological leanings. It is quite appropriate that our Premier should have referred to the aspirations of peoples who have been campaigning for full freedom all these years. In effect the dictum of liberation applies to all groups ethnic, or otherwise who are still not free in the full sense of the term "freedom".

For instance we may mention the grievances of the Tamil speaking people living in this Island. Several decades of representation on behalf of this minority have slipped by without anything concrete being achieved. The struggle is on and the momentum is gathering strength. It would, therefore, be appropriate for our Premier, now that she had laid down the principle for people's liberation movements all over the world, to have a look within and see for herself the immediate need for her to solve the problem of the Tamil speaking people in Sri Lanka.

THE WORSHIP OF THE SUPREME MOTHER GODDESS

BY V. SIVASAMY

(Continued from last issue)

The first three nights of this festival are devoted to the worship of the Goddess Durga (the divine embodiment of valour), the next three nights for the Goddess Lakshmi (the Goddess of wealth) and the last three for the Goddess Sarasvati (the Goddess of learning). Though they are often referred to as separate deities, they are but different forms of one and the same Supreme Mother Goddess. Each of these Goddesses represent the important ideals of the life cherished by the Hindus. It is sometimes said without proper knowledge of the sources of Hinduism, that Hindus are absorbed more with the things of the spirit than with the material aspects of life. Navaratri festival itself is an adequate answer for this criticism.

According to the Hindu Puranas this festival is celebrated to commemorate the victory of the Devi the Mother Goddess over the buffalo faced demon Mahisasura whom She destroyed on the tenth day in the form of Sarasvati. As a result of this. she is called Mahisasura Mardani and the tenth day of the festival is called the Vijayadasami (the victorious tenth day). The festival represents the significant victory of knowledge (Sarasvati) over ignorance personified as the demon. It is also to be noted that what valour and wealth cannot conquer is successfully conquered by learning represented by Sarasvati of crystal purity, When ignorance or malas or impurities or sins fettering the souls are destroyed, man becomes pure as God Himself, This is one of the loity ideals behind this festival Further one may also note that in the onward march of civilization, the significance and the pre-eminent position of learning over other secular pursuits of man.

This festival is popular among all people whether they are poor or rich, young or old, skilled workmen or unskilled workmen, educated or uneducated. As the festival reaches its climax during the last three nights devoted to the worship of Sarasvati, students, teachers, and learned men usually go all out to celebrate this on a grand scale. As a result the entire festival is often referred to as the Sarasvati puja. On the ninth day people worship the Goddess Sarasvati with flowers and offer Her all types of nice sweet meats and other eatables and fruits. They also keep their books, implements, weapons and other tools pertaining to their profession or work at their place of worship. Further this festival is celebrated not only in the temples and places of learning but in the houses and offices and places of work. As a result, there is great enthusiasm among all sections of the society, especially among the young.

The greatness of the Devi is described or sung in many Tamil and Sanskrit works, many of which are full of fervant bhakti and poetic excellence The Sarasvati Anthathy of the great poet Kampar, the Sakalakalavallimalai of Kumarakuruparar, the Abhirami Anthathy of Abhiramibhattar and the poems of Bharati may be mentioned as some important works in Tamil, on this subject. The Devimahatmyam the Lalitasahsranama, the Lalitatrisacti the Saundarya Lahiri and various other stotras and kirttaves on Durga, Laksmi and Sarasvati may be cited as examples of the works in Sanskrit. Many of these or at least some of these are recited and read during this season.

The Prisoners' Welfare Association

(By Muhandiram E. P. RASIAH, J. P.)
Vice Chairman P. W. A. Jaffna

The Annual General Meeting of the Prisoners' Welfare Association was held in the Auditorium of the Chamber of Commerce, Colombo on 24th September with Mr. Justice S. R. Wijetileke in the Chair. The Chief Guest, Mr. Justice Noel Tittewela, in the course of an illuminating and thought-provoking address drew the attention of the large number of delegates present, inter alia, to certain passages from the excellent printed Annual Report submitted by Mr. Thomas Amarasuriya, the Chairman of the P. W. A :—

".... The Central Committee also approved the setting up of 'the P W.A. Centre for Counselling and Crisis Intervention under the direct supervision of the Secretary and Welfare Officer, P. W. A. At this Centre Individual and group counselling and also crisis intervention services are being provided to newly discharged offenders and their families and also to the dependents of convicted and remand prisoners.....It must be stated that these are events which are the outcome of the enthusiasm and dedication of our Chairman, Mr, Thomas Amarasuriya...."

Public Seminar

"A Public Seminar on the theme "Criminal Justice and You ' was organised by the Association through its Jaffna Sub-Committee on 5-4-75 at the Public Library Auditorium, Jaffna Mr, Thomas Amarasuriya; Chairman, Central Committee presided....The purpose of the Seminar was to bring together representatives of the various Agencies that are involved in the Criminal Justice System, and the speakers at the Seminar included representatives from the Judiciary, Probation Services, Police, Prisons, the Press and the Public. The Seminar was also intended to give the general public an idea of the working of the various agencies in crime prevention and treatment of offenders and thereby to obtain public co operation for these agencies."

"The aim of the Association is to render every possible assistance to that type of ex-prisoner, who is genuinely desirous of turning his back to a life of crime .... Although the resettling of Prisoners is an Island-wide problem, complicated and diverse in nature, the Association is confident of tackling this problem effectively within the community. To achieve this, we seek the help and co-operation of every civic-minded person and all public-spirited employers in this vital service of re-settlement of the offenders...."

Muhandiram E. P. Rasiah, representing the Jaffna Branch, proposed the vote of thanks. He thanked the Chief Speaker, Mr. Justice Noel Tittewela for the interesting, informative and instructive address and remarked that the Jaffna Branch has started work on the lines outlined by the Chief Speaker—

"That they were re-educating and re-directing the attitude and motivation of delinquents and criminals, so as to bring their behaviour into full harmony with the law and their own willing acceptance of social regulations and legal restrictions."

He congratulated Mr. Delgoda, the Commissioner and his staff for working out successfully the new concepts of "work-release", "Release on license", "Open air Camp" etc in the Prison Administration. He thanked the President, Mr. Justice S. R. Wijetileke for conducting the proceedings of the day to the satisfaction of all.

He also congratulated Mr. Thomas Amarasuriya and his Secretary Mr. Jayawardene for their unostentatious, but sound solid work in 1975.

வாய்மூதி வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரச செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 8, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org